# Cities and Cultures That Inspire in Paripaadal

**M. Padmaja**
*Reg. No – 21113154022032, Research Scholar*
*Department of Tamil, S.T. Hindu College, Nagercoil*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**Dr. R. Sorna Bamila**
*Assistant Professor, Department of Tamil, S.T.Hindu College, Nagercoil*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255997

**Abstract**

*Paripadal is the fifth of the eight great books of the ancient period. It is famous for being praised as 'OnguParipadal'. This is the book sung with a panna in Sangam literature. The fact that Tamil literature has become famous for its devotional content can be understood through the history of Tamil literature. The worship of God is what matures the human mind. Paripadal has beautifully described that worship of God and the holy places of God. This literature is designed to highlight the history of the Pandya king, his valor, and the prosperity of the country. Since it is a song mixed with music, Paripadal was considered to be the reason for the emergence of Divya Prabandha books in later times. This article is based on the fact that it elegantly describes the beauty of the DivyaTirupathi mountain where the Lord resides, the beauty of the rain and floods of Vaigai, and the beauty of the Vaiyairiver.*

***Keywords:*** *Malirungundram, Veeduperu, VenkadambaMalai, Silambaru, Kodipoo, Brahmins, Antanayur.*

**References**

1. Siva Subramanian – Thirukkural: Detailed Commentary – Commercial Publications, Thiruthangal, Sivakasi – 626130.
2. Subramanian V. – Paripadal: Original Text with Commentary – New Century Book House (P) Ltd., 41 A, Sidco Industrial Estate, Ambattur, Chennai – First Edition: April [Year not specified].
3. Seyapal R. – Agananuru – New Century Book House (P) Ltd., 41 A, Sidco Industrial Estate, Ambattur, Chennai – First Edition: April 2004.
4. Thiruttakka Devar – Seevaka Sindamani – e-book, Original Text with Commentary – Podhigai Publisher Pvt. Ltd., Kanyakumari District.
5. Nagarajan V. – Pathuppattu, Volume 2: Original Text with Commentary – New Century Book House (P) Ltd., 41 A, Sidco Industrial Estate, Ambattur, Chennai – Third Edition: 2007.
6. Balasubramanian K.V. – Purananuru – New Century Book House (P) Ltd., 41 A, Sidco Industrial Estate, Ambattur, Chennai – First Edition: 2004.
7. Puliyur Kesikan – Silappathikaram: Original Text with Commentary – Saran Books, 19/9 Raja Street, Thiyagarayar Nagar, Chennai – 2012.

8. Madi Srinivasan U. V. – Naalayira Divya Prabandham, Vol. 1 & 2 – Sri Varahi Printers, Azhwarpet, Chennai – Edition: 2000.
9. Madi Srinivasan U. V. – Naalayira Divya Prabandham, Vol. 3 & 4 – Sri Varahi Printers, Azhwarpet, Chennai – Edition: 2000.
10. 10. Viswanathan A. – Kalithogai: Original Text with Commentary – New Century Book House (P) Ltd., 41 B, Sidco Industrial Estate, Ambattur, Chennai – Fourth Edition: October 2011.

# பரிபாடல் உணர்த்தும் ஊர்களும் பண்பாடும்

***மா. பத்மஜா***
பதிவு எண்- 21113154022032, முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு மையம், தமிழ்க்கலை ஆய்வகம், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***முனைவர் இரா. சொர்ண பமிலா***
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
தமிழ்க் கலை ஆய்வகம், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***
*பழம் பெருமைமிக்க எட்டுத்தொகை நூல்களுள் ஐந்தாவதாக அமைந்தது பரிபாடல். இதனை 'ஓங்கு பரிபாடல்' என்று புகழப்பட்ட சிறப்புடையது. சங்க இலக்கியங்களில் பண்ணோடு பாடப்பட்ட நூல் இதுவே ஆகும். தமிழ் இலக்கியங்கள் பக்தியின் பொருண்மையில் சிறப்பு பெற்று வருவதை தமிழ் இலக்கிய வரலாறு மூலம் உணர்ந்து கொள்ளலாம். மனிதனின் மனதை பக்குவப்படுத்துவது இறைவழிபாடு.அந்த இறைவழிபாட்டையும் இறைவனின் திருத்தலங்களையும் பரிபாடல் சிறப்பாக எடுத்துரைத்துள்ளது. பாண்டிய மன்னனின் வரலாற்றையும், அவன் வீரத்தையும், நாட்டின் வளத்தையும் சிறப்பிப்பதாகவே இவ்விலக்கியம் அமைந்துள்ளது. இசை கலந்த பாடலாக இருப்பதால் பிற்காலத்தில் திவ்ய பிரபந்த நூல்கள் தோன்ற காரணமானதாக பரிபாடல் விளங்கியது. இதில் திருமால் வீற்றிருக்கும் திவ்ய திருப்பதியான மலையின் அழகையும் , வைகையின் மழை வெள்ள சிறப்பையும், வையை ஆற்றின் சிறப்பையும் பண்பாட்டோடு எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*
***திறவுச் சொற்கள்:*** *மாலிருங்குன்றம், வீடுபேறு, வெண்கடம்ப மாலை, சிலம்பாறு, கொடிப்பூ, பார்ப்பினிகள், இருந்தையூர்*

## முன்னுரை

சங்கஇலக்கியங்கள்காலத்தால்முற்பட்டவை. அவை தமிழிலக்கிய மரபில் தனிச்சிறப்புடன் விளங்குகிறது. சங்கமக்கள் வாழ்ந்த வாழ்க்கை நிலைகளையும், இயற்கை வளங்களையும் படம்பிடித்து காட்டுவதாய் இவ்விலக்கியங்கள் திகழ்கின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழ் மக்களின் சமூக பின்னணியையும், வாழ்க்கை நெறிகளையும், அவர்கள் வாழ்ந்த இடங்களையும் சிறப்பிக்கும் வண்ணம் அமைந்துள்ளது இவ்விலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்க்கை வரலாற்றையும் பண்பாட்டுக் கூறுகளையும் எடுத்து கூறுவதால் தமிழரின் தனி அடையாளமாகவும் திகழ்கிறது. இத்தகைய சங்க இலக்கியத்தை எட்டுத்தொகை பத்துப்பாட்டு என இரு தொகுதிகளாக பிரித்துள்ளனர். அதில் அகப்புற இலக்கியமான இசையும், பண்ணும் கலந்த பரிபாடல் மிகுந்த சிறப்பினை பெற்றுள்ளது.இதில் பாண்டிய மன்னனின் பெருமைகளையும், தலைவன் தலைவி வாழ்க்கை நிலைகளையும் சிறப்பிக்கும் வண்ணம் அமைந்துள்ளது. அந்த வகையில் அகப்புற இலக்கியமான பரிபாடலில் உள்ள ஊர்களையும் அவற்றின் பண்பாட்டு கூறுகளையும் எடுத்துரைப்பது கட்டுரையின் நோக்கமாகும்.

**பரிபாடல்**

பரிபாடல் சங்க இலக்கிய தொகுப்பான எட்டுத்தொகை நூல்களில் ஒன்று. இது அகத்திணை பாடல்களையும், புறத்திணை பாடல்களையும் கொண்டுள்ளது. இந் நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை. தொகுத்த பாடல்களின் அடிவரையறை பற்றிய குறிப்பு கிடைக்கவில்லை பரிபாடலில் சிற்றலை 25 அடிகள் என்றும் பேரெல்லை 400 அடிகள் என்றும் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். இந்நூலுக்கு பரிமேலழகர் உரை எழுதியுள்ளார். பரிபாடலில் திருமாலுக்கு எட்டு பாடல்கள் செவ்வேளாகிய முருகருக்கு 31 பாடல்கள், காடுகாள் (காட்டில் இருக்கும் காளிக்கு) அதாவது கொற்றவைக்கு 1 பாடலும், வையைக்கு 26 பாடல்களும், பெருநகரமாகிய மதுரைக்கு நான்கு பாடல்கள் என மொத்தம் 70 பாடல்கள் உள்ளன. ஆனால் இவை முழுமையாக கிடைக்கவில்லை. தற்பொழுது திருமாலுக்கு 6 பாடல்களும், முருகருக்கு 8 பாடல்களும் வையைக்கு 8 பாடல்களும் கிடைத்துள்ளன. முதல் பாடலையும் இறுதி பாடலையும் பாடியவர் பெயர் தெரியவில்லை. மீதமுள்ள 20 பாடல்களையும் 13 புலவர்கள் பாடியுள்ளனர். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் பாடிய புலவரின் பெயரும் அப்பாடலுக்கு இசை வகுத்த புலவரின் பெயரும் பண் வகுத்தவர் பெயரும் இடம் பெற்றிருக்கும்.

**திருமாலிருங்குன்றம்**

மாலிருங்கன்றம், சோலை எனும் இரு சொற்களையும் கொண்டு 'திரு' என்னும் சொல்லால் அடைமொழி பெற்று திருமாலிருங் குன்றம் என அழைக்கப்பட்டது. அறிவின் எல்லையில் அறியப்படாத புகழுடனே பொலிந்த நில எல்லையை தாங்கிய மலைகள் பல இங்குள்ளன. மலை ஒரு நாட்டிற்கு சிறப்புடையது என்பதை,

**"தேன் தூங்கும் உயர்ச்சியை மலை**
**நாறிய வியன் ஞாலத்து" (மது.கா, 3-4)**

என்ற மதுரைக்காஞ்சிபாடல் வரிகள் சிறப்பிக்கின்றன. தம் நிலையிலிருந்து மாறாத சக்கரவாளம் முதலான தொல்லிசைப் புலவர்கள் ஆராய்ந்து உரைத்துக் கொண்டாடிய மலைகள் பல உள்ளன. அவற்றுள் அரணாகவும், முரணாகவும் அமைந்து சிறப்புடன் விளங்குவது இம்மலை. கடலும், கானலும் போன்று வெவ்வேறு நிறத்தையும், பிரிவற்ற சொல்லையும் பொருளையும் போல என்றும் பிரியாத தொழிலை உடைய திருமாலும், பலராமனும் தங்கும் நீண்ட நிலைப் பெற்ற மலையாக இக்குன்றம் விளங்குகிறது என்பதை,

**கல்அறை கடலும் கானலும் போலவும்,**
**புல்லிய சொல்லும் பொருளும் போலவும்,**
**எல்லாம் வேறு வேறு உருவின் ஒரு தொழில்**
**இருவர்த்**
**தாங்கும் நீள் நிலை ஓங்கு இருங்கன்றம்"**
***(பரிபாடல் ,15 . 10- 14)***

என்ற பரிபாடல் வரிகள் விளக்குகின்றன. இதனை

**"தென்கோடு இசைக்கும் திலதமாய்**
**என்ற திருமாலிருஞ்சோலை மலை"**
***(திருவாய்,10.7:4)***

என ஆழ்வார்பாடல் வரி சிறப்பிக்கின்றது. திருமாலின் திவ்ய தேசங்களில் தனிச் சிறப்பையும், புகழையும் உடையதும் பழமை வாய்ந்த ஊராகவும் திருமாலிஞ்சோலை மலை என்ற திருமாலிருங்குன்றம் விளங்குகிறது. திவ்ய ரூபனான திருமால் அழகர் என்ற பெயருடன் கோவில் கொண்டதால் அழகர் மலை என்ற பெயரும் பெற்றது என்பதை,

**"அலைவலைமை தவிர்த்த அழகன்**
**அலங்காரன் மலை**
**குல மலை கோல மலை குளிர் மாமழை**
**கொற்றமலை**
**நீல மலை நீண்ட மலை**
**திருமாலிருஞ் சோலை யதே"**
***(பெரியாழ்,திரு.353)***

என்ற பெரியாழ்வார் திருமொழி பாடல் அழகரையும், அழகர் மலையையும் அழகுறப் பாடுவதாக அமைந்துள்ளது. குன்றத்தில் இருக்கும் திருமாலை வழங்கினால் சொர்க்க உலகத்திற்கு செல்லும் ஆற்றல் உண்டு என்றும், குன்றின் மீது நின்று திருமாலின் சிறப்பை எல்லோரும் கேட்கும் வண்ணம் பேரொலி செய்து வழங்கினால் வீடு பேறு பெறுவர் என்பதை,

***.................துழாயோன் நல்கின் அல்லதை***
***ஏறுதல் எளிதோ வீறு பெறு துறக்கம்?***
***அரிதின் பெறு துறக்கம் மாலிருங்குன்றம்"***
***(பரி,15.15-17)***

பரிபாடல் வரிகள் சிறப்பிக்கின்றன. இதனை

***"அருள் தருவான் அமைகிறான் அது நமது விதி வகையே" (நாலா. பிர,3946)***

என நாலாயிர திவ்ய பிரபந்த பாடல் வரிகளும் எடுத்துரைக்கின்றன. இதனைப் போன்று நாச்சியார் திருமொழியில் குருவிகளும், கணங்களும் கூவுகையில் மானிடர் பேரொலி செய்து வழங்க வேண்டும். என்பதை,

***"காலை எழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள்***
***மாலின் வரவு சொல்லி மருள்பாடுதல்***
***மெய்ம்மை கொல்லோ?"***
***(நாச்.திரு,9:8)***

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன. பலராமன், ஆதிசேடனின் அவதாரம். அவனின் மார்பில் புரளும் வெண்கடம்ப மாலை போன்று அழகாக திருமாலிருஞ்சோலை மலையிலிருந்து விழும் அருவி ஆரவாரித்து பாயும் சிறப்பை உடையது.அவ்வாறு வருவது அங்குள்ள சிலம்பாற்றின் அழகை ஒத்து காணப்பட்டது. இவ்வாறு மலையில் சிலம்பாறு பாய்வதை,

***"சிலம்பாறு அணிந்த சீர்கெழு திருவின்***
***சோலையோடு தொடர்மொழி மாலிருங்***
***குன்றம்"***
***(பரி.15,22-23)***

என்ற பரிபாடல் வரிகள் சிறப்பிக்கின்றன. இதனை,

***நிலம்பக விழ்ந்த சிலம்பாற்று அகன்தலை***
***(சிலப்,11.108)***

என சிலப்பதிகாரமும்

***"சிலம்பார்க்க வந்த தெய்வ மகளிர்கள் ஆடும் சீர்***
***சிலம்பாறு பாயும் தென்திருமாலிருஞ் சோலையே"***
***(பெரியாழ்.திரு.338)***

என பெரியாழ்வாரும் சிலம்பாறு பாய்வதை சிறப்பாக எடுத்துரைக்கிறது. திருமாலின் நிறத்தை ஒத்த கார்மேகங்கள் சூழ்ந்து நிலைபெற்ற குளிர்ச்சியையும் அதோடு இளவெயில் சூழ்ந்த இருண்ட மலையாகவும் காட்சியளிக்கும் என்றும் இங்குள்ள சுனைகளில் பல மலர்கள் மலர்ந்து காணப்படுவதோடு சுனையை சுற்றிலும் அசோக மரத்தின் கிளைகள் எல்லாம் மலர்ந்தும் காய், கனிகள் நிறத்தால் மாறுபட்டு இருப்பதோடு வேங்கை மரத்தில் ஒளி பொருந்திய பூங்கொத்துக்கள் மலர்ந்து காணப்படுவதை அறியலாம். அவை திருமாலின் நிறத்திற்கும், ஆடைக்கும் இணையாக கூறப்படுகிறது. இம்மலையை அருகில் சென்று வழிபட முடியாதவர்கள் தொலைவில் நின்று வழிபட்டாலும் நினைத்த பயன் கிடைக்கும் என்றும் இக்குன்றில் இருக்கும் மந்திகளின் குட்டிகள் மலைக்கு மலை பாய்ந்து கொண்டிருப்பதையும் காட்சிபபடுத்துகிறார். முல்லையின் அரும்புகள் நெருக்கமாக இருப்பதை மகளிர் முறையான கற்பு வாழ்வை காட்டுவது போன்றும் நன்னீர் சுனைகளில் நீரானது நீல மணி போலவும், அவ்விடத்தில் மயில்கள் கிளைகள் தோறும் அமர்ந்து அகவி கொண்டிருக்கும். குறுக்கத்தி மலர்க்கொடி இலைகள் உதிருமாறு குயிலினம் அமர்ந்து கூவும். இவ்விரு ஒலிகளைப் போன்று வாய்ப்பாட்டு பாடுவது, பாடுபவரின் பாடல் ஓசையை எதிர்கொள்வது போல மலையின் எல்லா பக்கமும் எதிரொலிக்கும். அவ்வெதிரொலி ஓயாது கேட்குமாறு

சிறப்புடன்வழங்குவதுதிருமாலிருங்குன்றம் என்பதை,

**"மக முயற்கு மந்தி வரைவரை பாய**
**முகில் மயங்கு முல்லை முறை நிகழ்வு காட்ட**
**மணிமருள் நல்நீர்ச் சுனை மடமயில் அகவ**
**குறுகு இலை உதிர குயிலினம் கூவ**
**மலர் குழல் பாண்டில் இயம்ப அகவுநர்**
**நா நவில் பாடல் முழவு எதிர்ந்தன்ன"**
***(பரி,15.38-45)***

என்ற பரிபாடல் வரிகள் சிறப்பிக்கின்றன. இவ்வாறு சிறப்பு பெற்ற குன்றமாக திருமால் இருங்குன்றம் விளங்குகிறது.

**வையை**

வையை என்பது வைகை ஆற்றின் பழங்கால பெயர் .இது பாண்டியர்களின் தலைநகரான மதுரை மாவட்டத்தில் பாயும் ஒருநதியாகும். இதுமக்களின்வாழ்க்கையும், இயற்கை அழகினையும், நீர் வளத்தையும், தமிழின் தனி அடையாளத்தையும் வெளிப்படுத்தும் முக்கிய அம்சமாக விளங்குகிறது. இவ்வையைக்கு 'கிருத மாலை' என்ற பெயரும் உண்டு. இதனைதிருவிளையாடல் புராணம் பாடல் எண் (875 )சிறப்பிக்கிறது.

**வையை சூழ்ந்த வளங் கெழு வைப்பின்**
***புறம் 71(10)***

என்ற புறநானூற்று பாடல் வரிகள் வையையின் சிறப்பை உணர்த்துகிறது. வையையில் மழை வெள்ளம்அறிவியல் வளராத காலத்திலும் புலவர் மழை வந்ததை சிறப்பாகக் கூறியுள்ளார். கடல் நீர் ஆவியாகி மேலே சென்று வேகமாக திரண்டு மீண்டும் மழையாகின்றது. சூலுண்ட மேகம் மழை நீரை பெருமளவில் பெய்யச் செய்தது. அம்மழை நீர், நிலத்தை மூழ்கடிப்பது போல பெருவள்ளமாகி எங்கும் ஓடி நிறைந்தது. கடும் மழை பெய்யும் பொழுது விலங்குகள், பறவைகள், மனிதர்கள் துன்புறுவர் அவ்வாறு கடுங்குளிரில் எல்லா உயிரும் துன்பப்படும் என்பதை,

**மாமேல் மறப்ப மந்திர கூரப்**
**பறவை படிவன வீழக்கறவை**
**கன்று கோளொழியக் கடிய வீசிக்**
**குன்று குளிர்ப்பன்ன கூதிர் பானாள்**
***நெடு(9-12)***

நெடுநல்வாடை பாடல் அடிகள் மூலம் நக்கீரர் சிறப்பாக எடுத்துரைக்கிறார். மழை பெய்ததால் மலையில் உள்ள அருவியில் நீர் பெருக்கு அதிகமாகி மலையை கழுவுவது போலவும், மாசுகளை அகற்றுவது போலவும் வேகமாக இறங்கியது. அருவி பல கால்களாக பிரிந்து மலையில் இருந்து இறங்கி ஆறாக ஓடியது. அதனை குற்றமற்ற பாடல்களைப் பாடும் புலவர்கள் மழையை வாழ்த்தியும் பாடியுள்ளனர். அவர்களது வாக்கினை பொய்யாக்காமல் மெய்யென்று நிலைநாட்டும் வகையில் மழை நீர் எங்கும் பாய்ந்து சென்றது. இதனை

**புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி**
**வைகை என்ற பொய்யா குலக்கொடி**
***சிலப்13 (169-170)***

என்றசிலப்பதிகாரபாடல்வரிகள்புலவரால் பாடப்பட்ட வையையின் சிறப்பை எடுத்துரைக்கிறது. இரு நிலம் தார் முக்கிய போல தலைத்த வையை என்ற கலித்தொகையும் புலவரால் வையை சிறப்பிப்பதை எடுத்துரைத்துள்ளது. இவ்வாறு மலை உச்சியில் பெய்யும் மழை வெள்ளம் அருவியாக திரண்டு வந்து வைகையில் ஆற்றுநீராக ஓடிஉயிர்களுக்கு நன்மை செய்தது மென்புலமான மருத நிலத்தின் இயற்கை அழகினையும் வன்புலமான குறிஞ்சி நிலத்தின் வளத்தையும் பெருக்கி சிறப்பிக்கும். பாண்டிய மன்னன் தன் படையுடன் பகைவர் நாட்டிற்கு அணிவகுத்து இரவு பகல் பாராது செல்வது போல வையையும் இரு பொழுதிலும் இடைவிடாத ஓடும் என்பதை ஆசிரியர்

**"நிலன் உற நிமிர் தானே நெடுநிரை**
**நிவப்ப அன்ன-**
**பெயலான் பொலிந்து பெரும்புனல் பல நந்த**

***நலன் நந்த நாடு அணி நந்த புலன் நந்த***
***வந்தன்று வையைப் புனல்”***

***(பரி,7.7-10)***

என்ற பரிபாடல்வரி மூலம் சிறப்பாக எடுத்துரைக்கிறார். தண்ணீர் இல்லாத காலத்தில் ஆறுகளில் மணல் மேடுகள் வருவது இயல்பு. புது வெள்ளம் பெருக்கெடுத்து வரும் பொழுது அம்மணல்மேடுகளை மூழ்[1] செய்யும். அதுபோல வையை ஆற்றிலும் நீர் பெருக்கெடுத்து வந்து மணல்மேடுகளை மூழ்கச் செய்தது. வையையின் கரைகளில் நின்ற மாமரங்களில் வண்டுகள் மொய்க்கக் கூடிய மொட்டுகள் மலர்ந்து அழகாக காட்சியளிக்கும். அத்தகையமாமரங்களின் தளிரையும்,வாழை இலைகளின் தளிரையும் வைகை அடித்து வந்தது என்பதை,

***“வரி அறி ஆணும் முகில் வீரி சினைய***
***மாந்தின் தளிரோடு வாழையிலை மயக்கி”***

***(பரி,10.5-6)***

என்ற பரிபாடல் வரிகள் சிறப்பிக்கின்றன. இவ்வாறு இரு கரையிலுள்ள மலர்ச் சொடியில் உள்ள மலர்கள் ஆற்று நீரில் கலந்து வருவது பூவினால் போர்த்தப்பட்ட ஆடைபோன்று காணப்பட்டது என்பதை இளங்கோவடிகள்.

***“வையை என்ற பொய்யாக் குலக்கொடி***
***------- ------ ------- -------***
***புண்ணிய நறுமலர் ஆடை போர்த்து கண்ணீரை***
***நெடுநீர் கறந்தனல் அடக்கி புல்லாற்றின்***
***பூம்புனல் யாரே (சிலப்-13;172-175)***

என சிலப்பதிகார பாடல் வரிகள் சிறப்பிக்கின்றன. இதனையே,

***“வள்ளல் கைத்தல மாந்தரின் மால்வரை***
***கொள்கை கொண்ட குழு நிதி குப்பையை***
***உள்ளம் உள்ளவர்க்கு ஊர்தோரும்***
***உயிர் துறாய் வெள்ளநாடு மடித்து வரைந்ததே”***

***(சீவக-36)***

என்ற சீவக சிந்தாமணி பாடல் வரிகளும் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு பல்வேறு மலர்களை அடித்துக் கொண்டு வருவதால் வையை நீர் மணத்தை பரவ செய்தது. நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ எனும் நான்கு வகை பூக்களும் கமழும் சிறப்புடையதாக வையைவிளங்கியது. அது மட்டுமன்றி வெள்ளம் பெருகி ஓடுவதால் பல்வேறு ஒலிகள் முழங்கின. அதிலும் கரை உடையாமல் பாதுகாக்க காவலரை அழைப்பதற்கு பறைகள் முழங்கப்பட்டன. இத்தகைய சிறப்புடைய வையையில் வெள்ளம் பல்வேறு செயல்களுடனும் முழக்கங்களுடனும் வேகமாக கடலில் கலப்பதற்கு வந்தது.

## வையை புனல் விளையாட்டு

வையையில் புதுவெள்ளம் வந்ததால் அங்குள்ள மக்கள் நீராடுவதற்கு நீராடுவதற்குரிய படையுடன் விரும்பி சென்றனர். புதுநீராட வரும் மக்கள் குதிரையிலும், பெண் யானையிலும், கோவேறு கழுதையிலும், பல்லக்குகளிலும் மற்றும் நடந்தும் நீராட சென்றனர். அழகிய அணிகலன்களை அணிந்த இளைஞரும் மகளீரும் கரையை உடைத்துச் செல்லும் வைகை ஆற்றில் நீராடுவதற்கு பொருத்தமான அணிகலன்களை அணிந்து கொண்டு சென்றனர். அவ்வாறு நீர் விளையாட்டு செல்லும் பொழுது போட்டியிருக்குமாதலின் புனல் விளையாட்டு ஒரு போர் என்றும், போரினை நிகழ்த்தும் முறையாக வையைத்துறை சிறந்து விளங்கும் என்பதை, அன்று, போர் அணி அணியின் புகர் முகம் சிறந்தென,

***நீர் அணி அணியின் நிரை நிரை பிடி செல;***
***ஏர் அணி அணியின் இளையரும் இனியரும்-***
***ஈரணி அணியின், இகல் மிக நவின்று,***
***தணணி புனல் ஆடும் தகை மிகு போர்க்கண்***
***துணி புனல் ஆக துறை வேண்டும் மைந்தின்***
***அணி அணி ஆகிய தாரர் கருவியர்***
***அடு புனலது செலஅவற்றை இழிவா :***

***(பரி,6.25-32)***

என்ற பரிபாடல் வரிகள் சிறப்பிக்கின்றன.

நீர் விளையாட்டிற்கு செல்லும் பொழுது இளைஞரும், இனியரும் நெய் பூசப்பட்ட பெரிய நீர் தூவும் குழல், பனி நீர் நிரம்பிய மணம்மிக்க கொம்பு, நெட்டியால் செய்யப்பட்ட தெப்பம், நெட்டியால் செய்யப்பட்ட தேர் ஆகியவற்றையும், நீராடுவதற்கான சிறந்த ஆடையினையும், அணிகலன்களையும் எடுத்துக்கொண்டு நீராடச் சென்றனர். “தாளிதம்’ என்னும் பெயருடைய கால் ஆடையை அணிந்து கொண்டு சென்றனர். மேகலை ஏணிபடு காலை நன்றாக இறுகுமாறு அதன் தாளை பூட்டிக்கொண்டு சென்றனர். குருதியைப் போன்ற சிவந்த நிறமுடைய அரக்கு நீரை பீலிற்றும் கருவிகளிலும் அடைத்தும் அவற்றை முத்து போன்ற வெண்ணிறமுடைய பனி நீருடன் கலந்த சந்தனத்தையும், பெட்டியையும் வைத்து மூடி எடுத்துச் சென்றனர். இவ்வாறு நீர் விளையாட்டுக்கு செல்லுவதை பார்க்கும் போது வீரர் போருக்கு செல்லும் பொழுது படைக் கருவிகளை எடுத்து செல்வது போல காட்சி அளித்தது என்பதை,

***கைம்மான் எருத்தர் கலி மட மாவினர்,***
***நெய்ம் மாண் சிவிறியர், நீர் மணக் கோட்டினர்,***
***வெண்கிடைமிதவையர், நன் கிடைத் தேரினர்***
***சாரிகை மறுத்து தண்டா உண்டிகை***
***ஓர் இயவூ உறுத்தர ஊர் ஊர்பு இடம் திரீஇ***
***(பரி,6.33-37)***

என்ற பரிபாடல் வரிகளால் அறியலாம்.

**தைந்நீராடல்**

மார்கழி நாளில் வரும் முழு மதிவுடன் கூடிய திருவாதிரை நாளில் ஆதிரையான் என்று அழைக்கப்படும் சிவபெருமான் கோவிலில் திருவிழா நடைபெறும். அவ்விழாவில் திருமணமாகாத கன்னிப்பெண்கள் தங்கள் தாயாருடன் சென்று சடங்கு முறைகளை அறிந்த முது பார்ப்பினிகள் நோன்பு முறையை கூற, வைகறைப்பொழுதில் நீராடுவர். கன்னிப்பெண்கள் தைந்நீராடும் பொழுது காதில் நீல மலரை சொருகி கொண்டனர். அதை பார்த்த மற்றொரு இளம்பெண் அசோகினது செந்தளிரை செவியில் சொருகிக் கொண்டாள். மற்றொருத்தி கொற்றவைப் போல தோன்ற வேண்டும் என்பதற்கு கண் போல நெற்றி நிறைய திலகமிட்டாள். அடுத்த பெண் குவளை மலர் தண்டினை வளையல் போல் அணிந்து கொண்டாள். மற்றொரு பெண் மல்லிகை மலருடன் நெய்தல் மலரை சேர்த்து மாலையாக கட்டினாள். இவ்வாறு தைந்நீராடும் பொழுது மகளிர் செயல் இருந்தது என்பதை,

***மாஇருந் திங்கள் மறுநிறை ஆதிரை***
***விரிநூல் அந்தணர் விழவு தொடங்க,***
***புரிநூல் அந்தணர் பொலம் கலம் ஏற்ப,***
***வெம்பாதாக,வியல்நில வரைப்பு! “என***
***அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்,***
***முனித் துறை முதல்வியர் முறைமை காட்ட,***
***பனிப்புலர்வு ஆடி, பருமணல் அருவியின்***
***ஊதை ஊர்தர, உறைசிறை வேதியர்***
***நெறி நிமிர் நுடங்கும் அழல் பேணிய சிறப்பின்,***
***தையல் மகளிர் ஈர் அணிபுலர்த்தர***
***வையை!”***
***(பரி,11.77-87)***

என்ற பரிபாடல் சிறப்பாக எடுத்து ரைக்கிறது. “தவமும் தவம் உடையார்க்கு அழகு” என்ற குறளுக்கு ஏற்ப முற்பிறப்பில் பெற்ற தவத்தினால் இப்பிறவியில் வையையில் தைந்நீராடும் தவத்தினை பெற்றோம் என்று வைகையை நோக்கி கூறினார்கள். மறுபிறவியிலும் இத்தைந்நீராடலை பெற வேண்டும் என்று வேண்டினர்.

***மின் இழை நறு நுதல் மகள் மேம்பட்ட***
***கன்னிமை கனியாக் கைக்கிளைக் காம***
***இன் இயல் மாண் தேர்ச்சி இசை பரிபாடல் -***
***முன் முறை தெய்வத்தின் இம்முறை***
***இயைந்தேம்;***
***மறுமுறை அமையத்தும் இயைக !***
***நறு நீர் வையை நயத் தகு நிறையேசு***
***(பரி,11.134-140)***

**திருமருதத்துறை**

வையைக்கரையில் மக்கள் நீராடும் துறைக்கு திருமருதத்துறை என்று பெயர். பாண்டியனது திருமருதத்துறையில் மக்கள் யாவரும் ஒன்று கூடி வந்தடைந்தனர். அங்கு கேட்பவரை பிணிக்கும் இனிய இசை உடைய யாழினை கொண்ட பாணர்கள் மருதப்பண்ணை பாடினர். அதனை நீராட்டில் கலந்து கொண்ட மக்கள் தாமும் அப்பாட்டினை பாடியும், பாய்ந்து ஓடும் நீரில் ஆடியும் மகிழ்ந்தனர். இவ்வாறு ஆடவரும் மகளிரும் ஒன்றாக நீராடியதால் நீர் கலங்கி காணப்பட்டது. சந்தனம் மற்றும் பலவகையான மணச்சாந்துகள் தடவிக் கொண்டு நீராடும்பொழுது நீர் தன் உண்மை தன்மையிலிருந்து வேறுபட்டு காணப்படும் என்பதை,

**சாந்தும், கம்ழ்தாரும், கோதையும், சுண்ணமும்,**
**கூந்தலும் பித்தையும் சோர்ந்தன**
**பூவினும் அல்லால் சிறிதானும் நீர் நிறம்**
**தான் தோன்றாது இவ்வையையாறு**

**(பரி. திரட்டு, 2. 84-87)**

என்ற பரிபாடல் வரிகள் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. இயற்கையும், செயற்கையும் இணைந்த மதுரை மாந்தர்க்கு இன்பமூட்டும் இடமாக திருமருத முன்துறை விளங்கியது. மருத மரங்கள் அடர்ந்த அழகிய துறையாதலின் திருமருத முந்துறை ஆயிற்று. இது வையைக் கரையின்கண் இருந்த சிறப்பானதொரு நீராட்டுதுறை ஆகும். காவிரி கரையகத்தில் இருந்த கழார் முன்றுறை போல அக்காலத்தில் புகழ்பெற்ற துறையாகவும் இது விளங்கிற்று என்பதை,

**“வருபுனல் வையை வார்மணல் அகன்றுறை**
**திருமருதாங்கிய விரிமலர்க் காவின்”**

**அகம்36 (9-10)**

என்ற அகநானூற்று பாடல் இதன் சிறப்பை எடுத்துரைக்கிறது. இதனைப் போல

**“திசை திசை தேனார்க்கும் திருமருத முன்றுறை” கலி(25)**

என்று கலித்தொகையும் இதனை பாராட்டுகிறது.

**இருந்தையூர்**

மதுரையில் உள்ள வளமிக்க ஊர்களில் ஒன்று இருந்தையூர். இது வையைத் துறையிடத்தில் உள்ள திருமாலின் திருப்பதிகளில் ஒன்று என்பதை

**“நீடுநீர் வையை நெடுமால் அடியேத்த”**

**(சிலப், துன்ப. 4)**

என்ற சிலப்பதிகார அடி மூலம் உணரலாம். பாண்டி நாட்டில் வையைக் கரையில் திருமால் இருந்தருளும் கோலத்தை பரிபாடல் கூறுகிறது. இவ்வாறு காட்சியளித்த இடம் ‘இருந்தவளம்’ எனப் பெயர் பெற்றது. இருந்தவளம் என்பதன் சுருக்கமே இருந்தையென்பதாகும். இதுவே பின்னாளில் இருந்தையூர் ஆகிருக்க வேண்டும் என்பதை ஆளவந்தார் இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் என்ற நூலில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். உயிர்களை காக்கும் கடவுளாகவும், செல்வத்திற்குரிய கடவுளாகவும் பெருமாள் போற்றப்படுவதால் ‘இருந்தையூர் அமர்ந்த செல்வா’ என்று கூறுவது இங்கு பொருத்தமாக கூறப்பட்டுள்ளது.

**வான்நின்று உலகம்வழங்கி வருதலான் தான்அமிழ்தம்**
**என்று உரைத்தாற் பற்று**

**(குறள்.11)**

என வள்ளுவர் உரைக்கும் அமிர்தமாகிய மழையினை சையை மலை தருகிறது. வையை ஆறு தோன்றும், சையை மலை உயர்ந்த உச்சியினை உடையது. மலையின் உச்சியில் தேனடைகள் நிறைந்திருக்கும். அத்தகைய உயர்ந்த மலையில் பெய்யும் மழை நீர் ஊரை வளப்படுத்துகிறது. இத்தகைய இருந்தையூரின் ஒரு பக்கத்தில் அழகு மிக்க மலர்களுடைய வேங்கை வெங்கடம்பு மகிழம் அரும்புகள் மலர்ந்த அசோக மரம் போன்ற பிற மரங்களும் ஒன்றாக வளர்ந்த வளமுடைய மலையாக காணப்பட்டது. இவ்வாறு பசுமையான மரங்கள் சூழ்ந்த மலையை தொலைவில் இருந்து பார்ப்பவருக்கு நீல நிறம்

உடையதாக தோன்றும். அதனால் இம்மலையை மணி நிறம் கொண்ட மலை என்றும் கூறுவர். ஊரில் உள்ள குளத்தில் குளிர்ச்சியும் மணமும் பொருந்திய தாமரைப் பூவின் இடையிடையே அன்றலரும் நாள் மலர்களில் உள்ள தேனை உண்ணும் பொருட்டு வண்டுகள் ஆரவாரித்து ஒலி எழுப்புகின்றன. இவ்வாறு குளத்தில் தாமரை மலர் மட்டுமல்லாது பிற மலரும் மலர்ந்து காணப்படும் என்பதை,

> **"தண்நறும் தாமரைப் பூவின் இடைஇடை**
> **வண்ண வரிஇதழ்ப் போதின் வாய்**
> **வண்டு ஆர்ப்ப"** *(பா.திர,10-11)*

என்ற பரிபாடல் வரிகள் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. அதுமட்டுமின்றி மற்றொரு பக்கத்தில் வயல்கள் நிறைந்திருந்தன. அதன் அருகில் கரும்புச் சாலையில் கரும்பின் சாற்றை பிழிந்து எடுக்கும் ஓசையும், உழவர்கள் பாடும்ஏர்மங்கலப்பாட்டும்உழத்தியராகிய மகளிர் குரவையாடிக்கொண்டு நாற்று நடும் ஓசை என பலவித ஓசைகள் கொண்ட ஊராக காணப்பட்டது. இவ்வூரில் அறத்தில் மாறுபடாத தவ ஒழுக்கத்தை உடைய அந்தணர், நடுநிலையுடைய அறத்தினை நாடும் வணிகர், தம் தொழிலால் பிறருக்கு உணவினை கொடுக்கும் புண்ணிய தொழிலை செய்யும் வேளாளர் முதலிய மாந்தர்கள் வாழும் தெருக்கள் இருந்த ஊராகவும் இருந்தையூர் காணப்பட்டது. இங்குள்ள ஆதிசேடனின் திருக்கோயிலில் ஆண்களும், பெண்களும் வழிபாடு செய்வர், இங்கு நல்வினை செய்து வழிபாடு செய்வதன் மூலம் சொர்க்க உலகத்தை அடையலாம் என்கிறது பரிபாடல்.

> **"விளைந்தார் வினையின் விழுப்பயன் துய்க்கும்**
> **துளங்கா விழுச்சீர்த் துறக்கம் புரையும்"**
> *(பரி,திர.46-47)*

## முடிவுரை

பரிபாடலில் உள்ள ஊர்களில் வைகை ஆறு முக்கிய சிறப்பு பெற்ற ஊராக குறிப்பிடப்பட்டுள்ளது. திருமாலின் திவ்ய தேசமான திருமாலிருஞ்சோலையும், இருந்து காட்சியளிக்கும். இருந்தவளம் என்னும் இருந்தையூரின் வளத்தையும் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. நீலநிற மலை,மலை விளையாட்டுக்கள், இயற்கை வளங்களை பற்றியும் எடுத்துரைப்பதோடு. ஊர்களை மட்டும் கூறாமல் காடு, மலர் ,புனல், தெய்வங்கள் என எல்லாவற்றையும் பண்பாட்டு மரபுகளுடன் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர் என்பதை கட்டுரை வழி அறிந்து கொள்ள முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. சிவசுப்பிரமணியன், திருக்குறள் தெளிவுரை, கமர்சியல் பப்ளிகேசன்ஸ், திருத்தங்கல்- சிவகாசி- 626130.
2. சுப்பிரமணியன். வே, பரிபாடல் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41 ஆ, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, முதல் பதிப்பு ஏப்ரல்.
3. செயபால். இரா, அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41-ஆ சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை. முதல் பதிப்பு -ஏப் 2004.
4. திருத்தக்க தேவர், சீவக சிந்தாமணி மின்னூல் மூலமும் உரையும், பொதிகை பப்ளிஷர் பிரைவேட் லிமிடெட், கன்னியாகுமரி மாவட்டம்.
5. நாகராஜன். வி, பத்துப்பாட்டு இரண்டாம் தொகுதி மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,41 ஆ, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, மூன்றாம் பதிப்பு 2007.
6. பாலசுப்ரமணியன். கு.வெ, புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,41 ஆ,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, முதல் பதிப்பு 2004.

7. புலியூர் கேசிகன், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், சரண் புக்ஸ்19/9, ராஜா தெரு, தியாகராயர் நகர், சென்னை, 2012.

8. மதி சீனிவாசன் உ.வே, நாலாயிர திவ்ய பிரபந்தம் பகுதி1 மற்றும் 2, ஸ்ரீ வராகி பிரிண்டர்ஸ், 144, ஆழ்வார்பேட்டை, சென்னை, பதிப்பு -2000.

9. மதி சீனிவாசன் உ.வே, நாலாயிர திவ்ய பிரப்பந்தம் பகுதி 3 மற்றும் 4 - ஸ்ரீ வாராகி பிரிண்டர்ஸ் ஆழ்வார் பேட்டை சென்னை, பதிப்பு 2000.

10. விசுவநாதன். அ, கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, நான்காம் பதிப்பு அக்டோபர் 2011